விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சு

இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு

வெற்றிடமாகவுள்ள பதவி நிலைகளை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுதல்

விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப அமைச்சின் அகப்பாட்டெல்லையின் கீழ் செயற்படுவதும் 1979 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டதுமான இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவானது, தேசத்தின் புத்தாக்க திறன்களை மேம்படுத்துவதற்கு பொறுப்பான பிரதான அமைப்பாகும். ஆணைக்குழுவானது, தற்போது ஒரு ஆணையாளர் மற்றும் இரண்டு உதவி ஆணையார்களின் கீழ் செயற்படுகிறது.

ஆணைக்குழுவில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவி நிலைளை நிரப்புவதற்கு தகைமை உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

தபால் அலுவலக உதவியாளர் (01 பணியிடம்) – ஒப்பந்த அடிப்படையில்

கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்:

G.C.E.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி குறைந்தது இரண்டு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

இப்பதவிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள்:

- மூத்த அதிகாரிகளின் அடிப்படைப் பணிகளுக்கு உதவுதல்.
- அலுவலகத்தைச் சுத்தம் செய்தல்.
- இயந்திரங்களை இயக்குதல்.
- கடிதங்கள், பொதிகள், கோப்புகள் போன்றவற்றை விநியோகித்தல்.
- அலுவலகத்தைத் திறந்து மூ இப்பதவிக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகள்:
- மூத்த அதிகாரிகளின் அடிப்படைப் பணிகளுக்கு உதவுதல்.
- அலுவலகத்தைச் சுத்தம் செய்தல்.
- இயந்திரங்களை இயக்குதல்.
- கடிதங்கள், பொதிகள், கோப்புகள் போன்றவற்றை விநியோகித்தல்.
- அலுவலகத்தைத் திறந்து மூடுதல் மற்றும் சாவிகளைப் பாதுகாப்பாக வைத்திருத்தல்.

மாதாந்த மொத்த ஊதியம்: ரூ. 38,488.00+ ரூ.17,800.00 = ரூ.56,288.00

ஏனைய அனுகூலங்கள்:

ஊழியர் சேமலாபநிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்துக்கு முறையே 15% மற்றும் 3% பங்களிப்பு செய்யப்படும்.

வயதெல்லை -

22-45 வயதெல்லைக்குள் இருத்தல் வேண்டும். உள் விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயது வரம்பு பொருந்தாது.

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED

நேர்காணலின் போது, தொடர்புடைய கூடுதல் கல்வித் தகுதிகள், கூடுதல் பணி அனுபவம், தொழில்முறை மற்றும் பிற தகுதிகள், அத்துடன் நேர்காணலில் வெளிப்படுத்தும் செயல் திறன் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை, சுயவிவரக் குறிப்புடன் (bio-data) இணைத்து, பதிவுத் தபால் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 20.11.2026 அன்று அல்லது அதற்கு முன்பாக அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்பத்துடன் சான்றிதழ்களின் நகல்களை இணைக்க வேண்டும்; மேலும், விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பணியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். அரசுத் துறைகள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ நிறுவனங்களில் பணிபுரியும் விண்ணப்பதாரர்கள், தங்கள் விண்ணப்பங்களை உரிய வழிமுறைகளின்படி (proper channels) சமர்ப்பிக்க வேண்டும்.

ஆணையாளர் ,
இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு,
05 **ஆம் மாடி ,**
"**மெஹேவரபியச** " **கட்டிடம்** ,
கொழும்பு -05.
www.slic.gov.lk
011-2676645

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED